மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: (அ) ஆசியா '72 கண்காட்சியில் அமைக்கப்பட்ட தமிழக அரங்கிற்கு அலங்காரம் செய்ய வந்தவாசி பாய் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து வாங்கப்பட்ட பாய்களின் விலை ரூ. 8,651 (ரூபாய் எண்ணாயிரத்து அறுநூற்று ஐம்பத்து ஒன்று மட்டும்.)

(இ) ஆம். முழுத் தொகையும் கொடுக்கப்பட்டுவிட்டது.

திரு. கே. ஏ. வகாப்: இப்படி அரசாங்கத்தினால் வாங்கப்பட்ட கோரைப் பாய்கள் வெளி நாட்டினரால் பாராட்டப்பட்டனவா? அப்படிப் பாராட்டப்பட்டால், இப்படிப்பட்ட பாய்களை அப்படிப்பட்ட அரங்குகளிலும் கண்காட்சிசாலைகளிலும் பயன்படுத்துவதற்கு அரசாங்கம் சிபார்சு செய்யுமா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: வெளிநாட்டினரால் பாராட்டப்பட்டிருக்கிறது. எனவே மேற்கொண்டு இன்னும் அதற்கு வேண்டிய ஆதரவு அளிக்கப்படும்.

நெசவுத் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம்

*135 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

கைத்தறித் தொழிலாளர், பட்டு நெசவுத் தொழிலாளர் ஆகியவர்களுக்குக் குறைந்தபட்ச ஊதியம் நிர்ணயிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஆம்

திரு. கே. டி.கே. தங்கமணி: இதற்காகப் போடப்பட்டிருக்கக்கூடிய குழு எப்பொழுது தன்னுடைய சிபார்சுகளை சமர்ப்பிக்க இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒரு அறிக்கை கொடுத்து மீண்டும் சில விளக்கங்கள் கேட்டு அனுப்பப்பட்டிருக்கிறது. விரைவிலே தருவார்கள்.

திரு. இ. எஸ். தியாகராசன்: இதிலே கூட்டுறவுச் சங்கத்தில் சேர்க்கப்பட்ட நெசவாளர்களும் சேர்க்கப்பட்டிருக்கிறார்களா? கூட்டுறவுச் சங்கத்திற்கு அப்பால் இருக்கிற நெசவாளர்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரையில் நாமே ஒவ்வொரு மாவட்டத்திற்கும் கூலியை நிர்ணயிக்கிறோம். இப்படிப்பட்ட அறிக்கை வருகின்றபொழுது, இது அவர்களுக்குச் சாதகமாக இருக்குமானால், இதையும் நாம் கணக்கில் எடுத்துக்கொண்டு கூட்டுறவுத் துறையில் உள்ள நெசவாளர்களுக்கும் கூலியை நிர்ணயிக்கலாம்.